## செங்குத்தான பாதையில் இறங்குவது சுலபம்! ஏறுவது மிகக் கடினம்!

## த.வெ.க.விடம் ஆட்சியைக் கொடுத்து நிர்வாக அனுபவமும் புரிதலும் இல்லாமல்

# வளர்ச்சிப் பாதையிலிருந்து வேகமாக இறங்கிக் கொண்டிருக்கிறது தமிழ்நாடு!

## கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் எச்சரிக்கை!

**சென்னை, ஆக. 23-**

**“செங்குத்தான பாதையில் இறங்குவது சுலபம், ஏறுவதுதான் மிகக் கடினம். த.வெ.க.விடம் ஆட்சியைக் கொடுத்து நிர்வாக அனுபவமும் - புரிதலும் இல்லாமல் வளர்ச்சிப் பாதையிலிருந்து வேகமாக இறங்கிக் கொண்டிருக்கிறது தமிழ்நாடு” என்று கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

எம்.எல்.ஏ.க்களுக்கு கார் வழங்கப்படும் என்பதை விதி 110ன் கீழ் முதல்வர் அறிவித்துள்ளதையொட்டி கழக பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

‘Optics matter in administration’ அதாவது, அரசியலில் செய்யப்படும் எந்த ஒரு செயலின் மீதான பொதுப் பார்வை எப்படி இருக்கும் என்பதை உணர்ந்து செயல்படுவது மிக மிக முக்கியம்.

ஏனென்றால், முதல் பார்வையில் ஒரு விஷயம் எப்படி இருக்கிறதோ, அதைத்தான் பெரும்பாலானோர் பிடித்துக்கொண்டு பேசுவார்கள். அது குறித்த தர்க்க நியாயங்களுக்குள் எல்லோரும் செல்வதில்லை என்பது நிர்வாக அனுபவம் உள்ளவர்களுக்குப் புரியும்.

அதற்குச் சமீபத்திய சிறந்த உதாரணம், எம்.எல்.ஏ.க்களுக்கு கார் வழங்கப்படும் என்பதை விதி 110ன் கீழ் முதலமைச்சர் அறிவித்ததும், அதற்கு எம்எல்ஏக்கள் வானளாவப் புகழ்ந்ததும், பாட்டுப் பாடியதும்.

**முக்கியத்துவம் வாய்ந்தவை!**

அதைத் தொடர்ந்து, அன்றைய தினத்தில் விவாதிக்கப்பட்ட ஏறத்தாழ மூன்று துறைகளின் மானியக் கோரிக்கைகளுக்குப் பதினைந்தாயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. அது நியாயமானதா, இல்லையா? எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது? எவ்வளவு உட்கட்டமைப்புகளை மேம்படுத்தும்? அதன் மூலம் மக்களின் வாழ்க்கைத் தரமும் பொருளாதாரமும் உயர்வதற்கான வாய்ப்புகள் எத்தனை? என்பதையெல்லாம் விவாதிக்காமல், ஐந்து ஆண்டுகளுக்கும் சேர்த்து சுமார் 150 கோடி ரூபாய் செலவு வைக்கும் எம்.எல்.ஏ.க்களுக்குக் கார் வழங்கும் விஷயத்தைப் பேசுபொருளாக மாற்றிவிட்டார்கள்.

அரசின் நிர்வாகச் செலவுகளில் எம்.எல்.ஏ.க்களுக்குக் கார் வழங்குவது என்பது மிக மிகச் சாதாரணமான ஒன்று. அதுவும் குறிப்பாக வட்டாட்சியர், வட்டார வளர்ச்சி அலுவலர், வேளாண்மை அலுவலர் என வட்ட அளவிலான அரசு அலுவலர்களுக்கும், வட்டார அளவிலான அரசியல் ஒன்றியத் தலைவர்களுக்கும் கார் வழங்கப்பட்டிருக்கும் சூழலில், அரசின் அதிகாரப்பூர்வ வாகனம் எம்.எல்.ஏ.க்களுக்கு வேண்டும் என்பது ஒன்றும் நியாயமில்லாத கோரிக்கை அல்ல.

**சாணியைக் கரைத்துத் தலையில் ஊற்றிக் கொண்டிருக்கிறது த.வெ.க. அரசு!**

அதுவும் இவ்வளவு பெரிய அரசு நிர்வாகத்தில், பட்ஜெட்டில் ஆண்டுக்குச் சராசரியாக 30 முதல் 35 கோடி ரூபாய் என்பது ஒன்றும் பெரிய விஷயமும் அல்ல. ஏனென்றால், அரசின் மொத்த பட்ஜெட்டில் வீணாகும், விரயமாகும் செலவுகளே மிக எளிதாக 20 விழுக்காடு இருக்கக்கூடும்.

ஆனால், இதை ‘எடுத்தேன், கவிழ்த்தேன்’ என்றும், தான் என்ன செய்தாலும் மக்கள் ரசிப்பார்கள், ஏற்றுக்கொள்வார்கள் என்ற மமதையிலும், நிர்வாக அடிப்படைப் புரிதலும் இல்லாமல், இன்னும் சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், சரியான அதிகாரிகளைச் சரியான ஆலோசனைகளுடன் பயன்படுத்தாமலும் இவ்வளவு சாதாரணமான ஒரு பிரச்சினையைப் பெரிய பேசு



பொருளாக மாற்றி, சாணியைக் கரைத்துத் தலையில் ஊற்றிக்கொண்டிருக்கிறது த.வெ.க. அரசு.

இந்த நிகழ்வை தி.மு.க. அரசு எப்படி கையாண்டிருக்கும்?

ஒருவேளை எம்எல்ஏக்களுக்குக் கார் வழங்க வேண்டும் என்று முடிவு செய்திருந்தால், தெளிவாக முடிவு செய்திருப்போம்.

வழங்கலாம். ஆனால் நேரடியாக வழங்காமல், மாவட்ட ஆட்சியர் அல்லது மாவட்ட நிர்வாகத்திற்கு கூடுதல் வாகனங்கள் வழங்கப்பட்டு, எம்எல்ஏக்கள் பொதுமக்களின் பணிகளை மேற்கொள்வதற்காகத் தேவைக்கேற்ப பயன்படுத்திக் கொள்ளலாம் என்று ஓர் அரசாணையை வெளியிட்டிருப்போம்.

**தி.மு.க. அரசு இருந்தால் சரியாகச் செய்திருக்கும்!**

அதற்குப் பிறகு கொஞ்ச நாள் கழித்து, அந்த வாகனங்களை மாவட்ட நிர்வாகத்தின் மூலம் எம்.எல்.ஏ.க்களிடம் ஒப்படைத்துவிட்டு, பிறகு ஓராண்டு கழித்து அதற்குரிய தொடர் செலவினங்களுக்கு நிதி ஒதுக்கி சரியாகச் செய்திருப்போம்.

இப்படித்தான் பல விஷயங்களைச் செய்ய வேண்டும், செயல்பட வேண்டும்.

ஏனென்றால், அரசியலில் என்ன செய்கிறோம் என்பதைவிட, அதை மக்கள் எப்படிப் பார்ப்பார்கள் என்ற ‘optics’ மிக மிக முக்கியம்.

எடுத்துக்காட்டாக, இதன் பொருளாதாரப் பின்னணி என்ன, இதன் செலவினம் என்ன, அரசின் மொத்த பட்ஜெட் என்ன என்பதையெல்லாம் சாதாரண மக்கள் பார்க்க மாட்டார்கள். அவர்களைப் பொறுத்தவரை ‘கார்’ என்பது பெரிய விஷயம். தனக்குக் கிடைக்காமல் மற்றவர்களுக்கு அரசிடமிருந்து அது கிடைப்பதை மக்கள் எளிதில் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

இந்தப் புரிதல் இல்லாமல், சாதாரண ஒரு விஷயத்தை சின்னாபின்னமாக்கியிருக்கிறது.

நமக்கெல்லாம் இருக்கும் பயம் ஒன்றே ஒன்றுதான்.

## வண்டி ஓட்டக் கற்றுக்கொள்ளும் மலைப்பாதை டிரைவர்!

**நிர்வாக அனுபவமும் இல்லை! எந்தப்புரிதலும் இல்லை!**

ஒரு நிர்வாக அனுபவமும் இல்லாமல், எந்தப் புரிதலும் இல்லாமல், இவ்வளவு பெரிய வளர்ச்சிப் பாதையில் சென்றுகொண்டிருந்த நாட்டை இவர்கள் கையில் ஒப்படைத்திருக்கிறோம்.

மேல்நோக்கிச் செல்ல வேண்டிய ஒரு வாகனம் தட்டுத் தடுமாறி அதே இடத்தில் நின்று, அதன் பிறகு பாதாளத்தை நோக்கி விரைந்து வந்துவிட்டால், மீண்டும் அதை மேல்நோக்கிச் செலுத்துவது எவ்வளவு கடினமோ, அதேபோல்தான் தமிழ்நாட்டுக்கும் நடந்திருக்கிறது.

ஓட்டத் தெரியாத ஒரு டிரைவரை நம்பி, மலைப்பாதையில் விரைந்து சென்றுகொண்டிருந்த ஒரு பேருந்தை ஒப்படைத்திருக்கிறோம்.

**ஓட்டத் தெரியாதவரிடம் வாகனத்தை ஒப்படைப்பதுபோல**

அவரைச் சுற்றி நின்று ஓட்டுவதற்கு ஆலோசனைகள் சொல்கிறார்கள். சரியாகச் சொல்கிறார்களா, சரியாகச் சொல்லாமல் இருக்கிறார்களா, யாரை நம்புவது, யாரை நம்பாமல் இருப்பது என்று தெரிந்துகொள்வதற்குள் ஐந்தாண்டுகள் முடிந்துவிடும். வண்டி பல நூறு கிலோமீட்டர் பின்னால் வந்துவிடும்.

இது ஒரு எளிதான ஒரு புரிதல்தான்,

செங்குத்தான வளர்ச்சிப் பாதையில் இறங்குவது மிக மிகச் சுலபம். ஏறுவது மிக மிகக் கடினம்.

நாம் வேகமாக இறங்கிக்கொண்டிருக்கிறோம்.

காலமே, நீ ஓர் அதிசயப் பெட்டகம்!

என்னென்ன அதிசயங்களை வைத்திருக்கிறாயோ தெரியவில்லை!

இவ்வாறு துரைமுருகன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

## அரசின் நிதி நிலைமை கருதி – எங்கள் தலைவரின் அறிவுறுத்தலின்படி

# தி.மு.க. எம்.எல்.ஏ.க்களுக்கு அரசின் கார் வேண்டாம்!

## சட்டப்பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, ஆக. 23-**

**சட்டப்பேரவையில் நேற்று முன்தினம், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் “அரசின் நிதிநிலைமையைக் கருத்தில் கொண்டும் - எங்கள் தலைவரின் அறு வுறுத்தல் படியும் தி.மு.க. எம்.எல்.ஏ.க்களுக்கு அரசின் கார்கள் வேண்டாம்! என முடிவெடுத்துள்ளோம்” என அறிவித்தார்.**

சட்டப்பேரவையில் இதுகுறித்து உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டதாவது:-

பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான விஷயத்தை உங்கள் மூலமாக பதியவைக்க விரும்புகிறேன். அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் இந்த அரசு புதிய வாகனம் வழங்குவதாக நேற்று முன்தினம் அறிவித்திருக்கிறீர்கள்.

இதில் எங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிலைமையை, இந்த சபையில் பதிய வைக்க விரும்புகிறேன். ஏற்கனவே, தமிழ்நாடு அரசு கடும் நிதி நெருக்கடியில் இருப்பதாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே கூறி வருவதால், எங்கள் கழகத் தலைவர், மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த 59 சட்டமன்ற உறுப்பினர்கள் வாகனங்களைப் பெறுவதில்லை என்று முடிவெடுத்துள்ளோம்.



மேலும் அரசுக்கு ஏற்படுகின்ற தேவையற்ற செலவுகளைக் குறைக்கின்ற நோக்கத்தில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் தேர்தல் வேட்புமனுவில் குறிப்பிட்டுள்ள பொருளாதாரச் சூழலைக் கருத்தில் கொண்டு, பொருளாதாரத்தில் நலிவடைந்துள்ள உறுப்பினர்களுக்கு மட்டுமே, இந்த அறிவிப்பின் கீழ் வாகனம் வழங்க வேண்டும் என்பதை இந்த அரசின் கவனத்துக்குத் தாங்கள் எடுத்துச்செல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கையொப்பமிட்ட கடிதங்களை உங்கள் மூலமாக இந்த அரசுக்கு கொடுக்கிறோம்.

**கார் தேவையில்லை**

பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பேற்ற முதல் நாளிலிருந்து சொல்வது, ‘கஜானாவைத் துடைத்து வைத்து விட்டுப் போய்விட்டார்கள். கஜானாவில் பணம் இல்லை’ என்பதுதான். தொடர்ந்து அவர்கள் வைத்திருக்கின்ற குற்றச்சாட்டும் அதுதான். அதுமட்டுமல்ல, இவர்கள் தேர்தல் பிரச்சாரத்தில், இப்போது இருக்கின்ற அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் என அவர்கள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் பலபேர் சொல்லியிருக்கிறார்கள். எல்லாவற்றையும் இலவசமாகக் கொடுக்கிறீர்கள் என்று, குற்றம் சாட்டிவிட்டு இன்றைக்கு காரை இலவசமாக கொடுக்கிறீர்கள். அது உங்கள் முதலமைச்சரின் உரிமை. எங்களுக்கு கார் தேவையில்லை. எங்கள் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களுக்கு கார் தேவையில்லை. யாருக்கு கார் வேண்டுமோ, நீங்கள் வாங்கிக் கொள்ளுங்கள்.

எங்களின் வேண்டுகோள் என்னவென்றால், வேட்புமனுத் தாக்கலில் நீங்கள் யார், யாருக்கு கார் இல்லை என்று பதிவு செய்திருப்பீர்கள். எவ்வளவு சொத்து இருக்கிறது என்று சொல்லியிருப்பீர்கள். அதற்கு தகுந்த மாதிரி, அவர்களின் வசதி வாய்ப்புக்குத் தகுந்த மாதிரி கார் வாங்கி கொடுங்கள் என்பதுதான் எங்களின் பரிந்துரை.

**தொகுதி மறு வரையறை**

பேரவைத் தலைவர் அவர்களே, நம் அமைச்சர் அவர்கள் நேற்று நடந்த தென் மாநில முதலமைச்சர்கள் மாநாட்டில், தொகுதி மறுவரையறை பற்றி முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை பற்றிப் பேசினார்கள். கடந்த 12ஆம் தேதி, இதே சட்டமன்றத்தில் அனைத்துக் கட்சி ஒத்துழைப்புடன் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி இருக்கிறோம். அதில் மிகத் தெளிவாக 543 எம்.பி.க்கள் சீட்டை அப்படியே இருக்கச் செய்யவேண்டும் என்றுதான் அந்தத் தீர்மானத்தில் இடம் பெற்றுள்ளது. அந்தத் தீர்மானத்தைத்தான் நாம் நிறைவேற்றியுள்ளோம். ஆனால், நேற்று நடந்த கூட்டத்தில், முதலமைச்சர் உரையில், இந்த 543 எம்.பி.க்கள் சீட்டை அப்படியே இருக்கும்படி (ப்ரீஸ்) செய்ய வேண்டும் என்று எந்த இடத்திலும் இடம்பெறவில்லை என்பதை இந்த அவையின் கவனத்துக்கு எடுத்து வருகிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொகுதி மறுவரையறை விஷயத்தில் நாங்கள் தொடர்ந்து எங்களின் நிலைப்பாட்டை, மீண்டும் இங்கே பதிய வைக்க விரும்புகிறேன். எங்களைப் பொறுத்தவரை ஏற்கனவே, இந்த அவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி, 543 என்ற எண்ணிக்கை தொடர வேண்டும். அப்படி அதில் ஏதாவது மாற்றம் ஏற்பட்டால், ஏற்கனவே தமிழ்நாட்டுக்கு இருக்கின்ற 7.18 சதவிகித பிரதிநிதித்துவம் குறையக்கூடாது. அது ஏறலாமே தவிர, அது குறையக் கூடாது என்பதுதான், திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிலைப்பாடு.

## பொருளாதாரத்தில் நலிவடைந்துள்ள உறுப்பினர்களுக்கு மட்டும் கார் வழங்கலாம் என்பதுதான் எங்கள் பரிந்துரை!

இவ்வாறு சட்டப் பேரவையில், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் உரையாற்றினார்.